# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 19-03-2025

SC. 13/2021

அ.சா 8 – மருத்துவர் சுகந்தி , ESI மருத்துவமனை சிப்காட் , ஒசூர்

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ம் நாள் சுகந்தி என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகந்தி | கணவர் பெயர் | ஜெயகுமார் |
| வயது | 45 | கிராமம் | கோபிசெட்டி பாளையம் |
| வட்டம் | கோபிசெட்டி பாளையம் | மாவட்டம் | ஈரோடு |

முதல் விசாரணை : –

நான் தற்போது கோபிசெட்டி பாளையம் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.12.2012 ஒசூர் ESI மருத்துவமனையில் 24 மணிநேர பணியில் இருந்த போது இரவு 12.30 மணியளவில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க சரவணன் த/பெ ஏழுமலை, க. எண். 646, புதிய வீட்டு வசதி வாரியம், ராயக்கோட்டை ரோடு, ஒசூர் . என்பவர் தன்னை , ஜேம்ஜே இன்டஸ்ரியல் கம்பெனியில் இருந்த தெரிந்த நபர் ஒருவர் கத்தியால் அவருடைய இடது பக்க கழுத்தில் வெட்டிவிட்டதாக ரத்த காயத்துடன் சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்த நான் அவருக்கு முதலுதவி செய்து விட்டு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு விபத்து பதிவேட்டில் பதிவு செய்வதற்காக அனுப்பி வைத்தேன். மேலும் அவரை மேல் சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ள நாராயணா இருதாலயா மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : –**

என்னிடம் சிகிச்சைக்கு வந்த சரவணனுக்கு காயத்தின் தன்னை எப்படி இருந்தது என்றால் நீர்த்தன்மையுடன் தான் இருந்தது. மனித உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறினால் அது எவ்வளவு நேரத்தில் உறைந்து விடும் என்றால் 20 – 30 நிமிடங்களில் உறைந்து விடும் என்கிறார். மேலும் காயத்தின் தன்மையை பொறுத்து இரத்ததின் உறைவு நிலை ஏற்படும் என்றும் சாதாரண காயமாக இருக்கும் பட்சத்தில் 10–15 நிமிடங்களில் உறைவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் சாட்சி சொல்கிறார். நோயாளிக்கு நான் என்ன முதலுதவி சிகிச்சை அளித்தேன் என்றால் அவருக்கு ஏற்பட்ட காயத்தில் இருந்த இரத்தத்தை சுத்தம் செய்து டிரஸ்ஸிங் செய்து, TT ஊசி போட்டேன் என்கிறார். நோயாளி சிகிச்சைக்கு வரும் போது பேசும் நிலையில் தான் இருந்தார் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை என்கிறார். போலிசார் என்னை விசாரித்த தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை என்கிறார். 09.04.2013 ல் என்னை போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur